எலஹர பிரதேச சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எலஹர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றம் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எலஹர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளுராட்சிமன்ற நிறவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான

பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத்

திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமத்துடன் தொடர்பான இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 02 ஆம் அத்தியாயத்தின் ஈஜி 3.3 இன் பிரகாரம் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகணங்கள் பெறுமானதேய்வு முறைமையாக குறைந்து செல்லும் மீதி முறைமை பயன்படுத்துவதாக கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்பு 12 கீழ் காண்பிக்கப்பட்டு அதற்கு முரணாக இரட்டிப்பு உரிமை வாய்ப்பாடு வாய்ப்பாட்டிற்கு பெறுமானத்தை செய்யப்பட்டிருந்தது.	2020 ஆண்டிலிருந்து மீண்டும் கணிப்பீடு செய்து சீராக்கவதற்கு நடவடிக்கை எடுப்பதாக..	பொதுத்துறை கணக்கிட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 02 ஆம் அத்தியாயத்தின் ஈஜி 4.22 இன் பிரகாரம் நீண்டகால கடன் எடுப்பனவுகளுக்குரிய வட்டி விகிதம், கடன் தொகையின் கால எல்லை, கடன் தொகை பெற்றுக்கொண்ட திகதி, கடன் தொகை செலுத்த வேண்டிய திகதி, கடன் தொகையின் நிபந்தனைகள், நோக்கங்கள் பிணைகள் மற்றும் விசேட விடயங்கள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	2020 ஆண்டிலிருந்து மீண்டும் கணிப்பீடு செய்து சீராக்கவதற்கு நடவடிக்கை எடுப்பதாக..	பொதுத்துறை கணக்கிட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 02 ஆம் அத்தியாயத்தின் ஈ.ஜி 4.6 பிரகாரம் ஊழியர் கடன் மற்றும் முற்பணத் தொகை உட்பட அனைத்து வகையிலும் பெற வேண்டியவைகளுக்காக நிதி ஏற்பாடு ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும் அம்மீதிகளுக்கு ஐயக்கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.	ஐயக்கடன் ஒதுக்கீடு ஒன்று தேவையில்லை என்பதாக.	பொதுத்துறை கணக்கிட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மதுதமன நீர் வழங்கல் திட்டத்தின் மோட்டாரின் வருடாந்த தேய்மானம் ரூபா 117,020, திரண்ட தேய்மான ஒதுக்கத்திற்கு சேர்க்கப்படாத காரணத்தினால் பொறுத்துக்கள் கணக்கின் தேறிய பெறுமதி அத்தொகையினால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 14,900,000 பெறுமதியான கழிவு பவுசர் மீளாய்வாண்டில் ரூபா 596,000 தேய்வு செய்யப்படாததனால் மோட்டார் வாகன தேய்வு கணக்க அத்தொகையினால் குறைவாகவும், மோட்டார் வாகனங்களின் மீதி அந்தத் தொகையால் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(இ)	நிலுவை சம்பளம் மற்றும் நானாவித கடன் கொடுத்தோர் நிலுவைத் தொகை ரூபா 241,434 ஆல் குறைத்தும், எதிர்வரும் ஆண்டிற்கான மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி கட்டணங்களுக்கான பெறுமதி கடன் வழங்கல் கடன்கொடுத்தொரின் கீழ் ரூபா 62,371 ஆல் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்கம் செய்வதாக. .	சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஈ)	பிரதேச சபையின் டிராக்டர் வாகனம் பழுதுபார்ப்பதற்காக இலங்கை மஹவலி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 300,000 முற்பணத் தொகை செலுத்தப்பட்ட வைப்பு மற்றும் முற்பணங்களின் மீதியில் இருந்து விடுபட்டிருந்தது.	பகுதிக் கொடுப்பணவு ஒன்றாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	செயற்பாட்டு நடவடிக்கை களிலிருந்தான காசுப் பாய்ச்சலை கணக்கிடும் போது, கடன்பட்டோர் அதிகரிப்பு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் ரூபா 70,525,330 ஆக இருந்ததுடன், அது ரூபா 73,042,362 என ரூபா 2,517,032 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்வதாக.	காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.
(ஊ)	சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றின் பிரகாரம் கடன்பட்டோரின் அதிகரிப்பு ரூபா 42,891,030 ஆக இருந்த போதிலும், அது காசுப்பாய்சல் கூற்றில் ரூபா 216,050,024 ஆக ரூபா 173.158,994 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்வதாக	காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டில் நிர்மாணக் துறை கடன் கொடுத்தொராக காட்டப்பட வேண்டிய ரூபா 20,621,494	ஏற்றுக்கொள்வதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்

	விடுபட்டதால் தீர்வு செய்யப்பட்ட ரூபா 407,436 கடன் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்து கபணப்பட்டதனாலும் தேறிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 20,214,058 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.		
(ஏ)	மீளாய்வாண்டு இறுதித் திகதியில் கைத்தொழில் கடன்பட்டோர் மீதி ரூபா 351,952 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	விலை விபரங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ள தாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(ஐ)	பிரதேச அபிவிருத்தி உதவி திட்டத்தின் (LDPS) கைத்தொழில் கடன்பட்டோர் மீதி ரூபா 22,829,303 ஆக இருக்க வேண்டியதுடன் அது பிழைகளுடன் கூடியதாக ரூபா 39,149,021 என கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் அந்த மீதி ரூபா 16,319,718 தொகையால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	பட்டியலொன்று இருமுறை கணப்பீடு செய்யப்பட்டுள்ளதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(ஓ)	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,583,000 பெறுமதியான ப்ரோல் இயந்திரம் சொத்துக் கணக்கில் ரூபா 15,830,000 ஆக பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் சொத்துகள் பொறுப்புக்கள் கூற்றில் ஆதனங்கள் பொறிகளின் மீதி ரூபா 14,247,000 தொகை கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றினூடாக திருத்தம் செய்து கொள்வதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(ஔ)	மீளாய்வாண்டில் நிர்மாணக் கடன்பட்டோர் பிரதேச அபிவிருத்தி உதவி திட்டத்தின் (LDPS) மீதியொன்று இல்லையாயினும் அது ரூபா 34,963,382 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் கைத்தொழில் கடன்பட்டோர் (LDPS) மீதி மற்றும் மூலதனச் செலவு கணக்கு மீதி அத்தொகையினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் ஊடாக சீர் செய்து கொள்வதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(ஓ)	ஆலிகிம்புலாவெல கிராமத்தினூடாக வீதி கொங்கரீட் இடுவதற்கான செலவான ரூபா 1,341,686 தொகை பாலங்கள் மதகு மற்றும் வீதிகளின் மீதிகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீர் செய்து கொள்வதாக	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்

1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 ல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 16 கணக்கு மீதிகளின் பெறுமதி அக் கணக்கு மிதிகளுக்குரிய அட்டவணை மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 67,750,665 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் மூலம் சீராக்கம் செய்வதாக.	கணக்கீட்டு புத்தகங்கள் ஒப்பிடப்பட்டு சரியான பெறுமதி பதிவு செய்யப்பட வேண்டும்.

(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 ல் உள்ளவாறு தயாரிப்பதற்கு அடிப்படையாக கொண்ட LG 13 அறிக்கைகளில் காண்ப்படும் 36 பிரதான செலவின தலைப்புகளின் பெறுமதி செலவின பேரேட்டில் காணப்படும் பெறுமதியுடன ஒப்பிடும் போது ரூபா 14,519,299 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகள் மூலம் சீராக்கம் செய்வதாக.	கணக்கீட்டு புத்தகங்கள் ஒப்பிடப்பட்டு சரியான பெறுமதி பதிவு செய்யப்பட வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்காக எழுத்து மூலம் சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காணப்படும் மொத்தம் ரூபா 313,066,970 பெறுமதியான 06 சொத்து, 02 வருமான மீதிகள், பொறுப்பு மீதியொன்று மற்றும் உரித்து மீதிகளுக்குரிய பதிவேடுகள், அவணங்கள் அட்டவணைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்கவும் சான்றுறுதிப்படுத்தவும் முடியாமல் இருந்தது.	எதிர்காலத்தில் உரிய சான்றிதழ்களை சமர்ப்பிப்பதாக	உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 <u>இணக்கமின்மைகள்</u>

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங் களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**நியதிகள், சாசனங்கள் மற்றும் பிரமாணங்கள்**			
	1988 இன் 56, 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங் களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 (ஆ)பகுதி	பிரதேச சபையினால் பராமரித்து செல்லப்படுகின்ற சுடலைச்சாலைக்கான மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	அனுமதி பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுதது வருவாக. .	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
'(ஆ)	2009 ஏப்ரல் 17 ஆம் திகதி 1597/8 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்திற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட அதிவிசேட வர்த்தமானி பத்திரம்	2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 82 கட்டிட அனுமதிபத்திரங் களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் அதில் 81 விண்ணப்பங் களுக்காக இணக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டு இருக்கவில்லை.	இணக்கச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு முன்வரவில்லை என்பதாக. .	இணக்கச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் நி.பி 1646	பிரதேச சபையின் 17 வாகனங்களுக்கரிய ரூபா 5,818,417 ஆன எரிபொருள் பயன்படுத்திய முறையை காண்பிக்கும் ஓட்டக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.	சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்து வருவாக.	ஓட்டக் குறிப்புக்களை உரிய திகதியில் சமர்ப்பிக்க் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 147,789 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,519,834 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பிடப் பட்ட வருமானம்	பட்டியலிடப்ப ட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	2,173,022	2,393,534	1,782,482	2,384,424	2,716,269	340674	263,740	1,133,992
(ii)	வாடகை	9,820,310	7,735,040	7,591,561	2,308,253	34,495,000	2,566,250	3,176,820	2,164,774
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங் கள்	1,353,050	316,900	241,150	214,750	885,000	1,716,790	752,590	1,430,220
(iv)	ஏனைய வருமானம்	10,970,299	15,198,424	14,652,734	7,596,825	17,383,816	5,884,389	5,446,801	1,219,528
	மொத்தம்	24,316,681	25,643,898	24,267,927	12,504,252	55,480,085	10,508,103	9,639,951	5,948,514

- மேலே உள்ள சபையால் வழங்கப்பட்ட 3 வருமான மூலங்களில் கணித பொருத்தமின்மை இருந்தது.

2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**வீத வரி**		
(i)	1946 இன் 30 ஆம் இலக்க குத்தகை மற்றும் மதிப்பீட்டு கட்டளை சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் வீதவரி ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்து வீதவரி அறவிடயப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுகக்காமல் 2004 ஆண்டின் வீதவரி மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு அறவிட்டமையால் உரிய கால ரீதியில் செயற்படாத காலம் 15 ஆண்டுகளாக இருந்தன.˙	புதிய மதிப்பீடொன்று மேற்கொள்வதாக.	வீதவரி ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீத வரி வருமானம் ரூபா 398,584 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 312,920 முன்னைய ஆண்டுகளுக்குரியதாக இருந்தன.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நிர்ணயித்த வருமானத்தை விரைவில் சேகரித்தல் வேண்டும்.
(iii)	மீளாய்வாண்டின் கைத்தொழில் மற்றும் வியாபார வரிகளிலிருந்து பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 1,740,520 ஆகவும், ஆண்டு முழுவதும் பட்டியலிடல் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 617,700 ஆகவும் இருந்தது, இது 35 சதவீதம் அளவிலான குறைவான பெறுமதியை எடுத்திருந்தத, ஆண்டின் இறுதியில் ரூபா 2,258,210 ஆன மொத்த நிலுவை தொகையில் ரூபா 1,135,390 முன்னைய ஆண்டுகளுக்கு உரியதாக பெற வேண்டிய நிலுவை வருமானமாக இருநதது.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நிர்ணயித்த வருமானத்தை விரைவில் சேகரித்தல் வேண்டும்.
(ஆ)	**வாடகை**		
(i)	மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கடைகளை பெற்றுக்கொண்ட 59 பேரிடமிருந்து ரூபா 1,043,511 தொகை அறவிட வேண்டியிருந்ததுடன் அதில் ரூபா 681,520 ஆன 11 கடைகளைப் பெற்றவர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது.˙	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக..	நிர்ணயித்த வருமானத்தை விரைவில் சேகரித்தல் வேண்டும்.
(இ)	**ஏனைய வருமானங்கள்**		
	வாகனங்களை வாடகைக்கு வழங்கும் அடிப்படையில் அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா ,1,264,742 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,002,242 முன்னாள் கூறிய பெறவேண்டிய நிலுவை வருமானமாக கணக்கிடப்பட்டிருந்த போதும் பெறவேண்டிய தரப்பினர் யார் என்பதை இனங்காண்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தகவல்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	குறித்துரைக்கப்பட்ட வருமானத்தை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	**நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள்**		
	மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தாக காண்பிக்கப்பட்டிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 32,577,554 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா. 5,224,080 ஆக இருந்தது.	வருமானத்தை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	குறிப்பிட்ட வருமானத்தை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றதல்

பிரசேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
உப உறுப்புரை பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 23 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் தேதி வரை 10 பிரதான விடயங்களுக்காக உப உறுப்புரை பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென்பதாக.	உப உறுப்புரை களை பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்கு சபைக்குச் சொந்தமான டபே டிராக்டர் கிடைத்து 10 ஆண்டுகள் கடந்து விட்ட போதும் அது இன்னும் பதிவு செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.	எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக .	பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான இரட்டை கெப் மற்றும் டிப்பர் வண்டியின் மைலேமானி 3 ஆண்டுகளாக செயலிழந்திருந்த போதிலும், அது பழுதுபார்க்கப்படாமல் தொடர்ந்து ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு வந்தஆ. மீளாய்வாண்டில் இரண்டு வாகனங்களுக்கும் கட்டுப்பாடின்றி ரூபா 874,016 எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.	திருத்தியமைப்பதற்கு நியாயமான முயற்சிகள் மேற் கொள்ளப்படு கின்றதாக.	மைலேர்மானியை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	பிரதேச சபையின் 03 வாகனங்களை 10 மாதங்கள் முதல் 03 ஆண்டுகள் மற்றும் 07 மாதங்கள் வரை பழுதுபார்ப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் தொடர்புபட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட்டு சபையின் செயறபாடுகளுக்கும் வருமானத்தை உழைக்கும் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படவில்லை.	நியாயமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக.	பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	2022 பெப்ரவரி 27 ஆந் திகதி பெறுகை குழு, சபைக்குச் சொந்தமான பேக்கோ லோடரை ரூபா 880,000 மதிப்பீட்டில் பழுதுபார்க்க பரிந்துரைத்திருந்த போதிலும், நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக பழுதுபார்ப்பை ஒத்திவைக்க பொதுச் சபை	அங்கீகாரம் பெறுவதில் சிரமம் இருந்ததாக அதை	பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முடிவு செய்தது. இதன் விளைவாக, 2022 செப்டம்பர் 06 ஆந் திகதி அளவில் பழுதுபார்க்கும் மதிப்பீடு ரூபா 1,408,100 ஆக, அதாவது ரூபா 528,100 ஆல் அதிகரித்தமையால் மீளாய்வு ஆண்டின் இறுதிக்குள் குறித்த பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்படவில்லை.

3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான உடைய ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபைக்கு சொந்தமான பெறுமதிஇனங்காண முடியுமான ரூபா 22,621,118 ஆன 04 சொத்துக்கள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத ஒரு உருப்படி உட்பட 05 உருப்படிகள் பல்வேறு காரணங்களால் பயன்படுத்தாமல் செயலற்ற நிலையில் உள்ளன.	பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	சொத்துக்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**உரித்தினை கையேற்றல்** பிரதேச சபையால் பயன்படுத்தப்படுகின்ற ரூபாய் 71,850,000 பெருமதியான 06 காணிகளின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுக்கவில்லை.	கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக	கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	**பௌதீக வாகன நட்டங்கள்**		
	மீளாய்வாண்டின் ஏப்ரல் 16 ஆம் திகதி இடது பக்க கண்ணாடி மரம் ஒன்றின் கிளையில் மோதி முழுமையாக வெடித்திருந்ததுடன் விபத்து இடம்பெற்று மூன்று நாட்களின் பின்னர் அது தொடர்பாக பொலிசுக்கு அறிக்கை இடப்பட்டு இருந்தது. பின்னர் இது தொடர்பாக பரிசோதனை நடத்தப்பட்டு குற்றவாளிகளை இனங்காண்பதற்கும் நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாது காப்புறுதி கம்பனியிடம் ரூபா 142,190 ஆன நட்டத்தை மீளளிப்பு செய்வதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காப்புறுதி மூலம் நட்டத்தை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு நட்டத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 செயற்திட்டங்கள், பணிகள் அல்லது மூலதனப் பணிகளில் தாமதங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நேர் உழைப்பு முறை அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களுக்காக உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தின் மூலம் சம்பளம் மீள்நிரப்பல் தொழிலாளர்களின் உழைப்பு கிரயும் மீள்நிறப்பாத பின்னணியில்	நேர் உழைப்பு அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்ற	மீளளிக்காத செலவின மதிப்பீடு செய்யக் கூடாது

	அந்த ஊழியர்களின் உழைப்பு கிரயத்தை உள்ளடக்கி வெவ்வேறு செயற்திட்டங்களில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரித்து செயற்படுத்தப்பட்தன் காரணமாக ஏனைய செயற்திட்டங்களுக்கு அனுப்புவதற்கு முடியுமாக இருந்த ரூபா 3,875,097 ஆன ஏற்பாடு விளைவற்று சேமிக்கப்பட்டிருந்தது.	காரணமாக சேமிப்பு இடம் பெற்றுள்ளதாக.	
(ஆ)	உள்ளூராட்சி மன்ற அமைப்பை வலுப்படுத்தும் திட்டத் திட்டத்தின் மூலம், 2021 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட நிர்மாண செயற் திட்டத்தின் மூலம், 03 ஈ நூலகங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மூலம் 02 நூலகங்களுக்கு ரூபா 3,121,952 செலவினம் மேற்கொள்ளப்பட்டு அச்செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.	வேறு நோக்கத்திற்காகப் பயன்படுத்த பல சந்தர்ப்பங்களில் முயற்சி செய்யப்பட்ட தாக	நிர்மாணம் மேற்கொள்ளப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்த வேண்டும்.
(இ)	**செயற்பாடுகளை பூர்த்தி செய்வதில் தாமதம்** உள்ளுராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ், முன்னைய ஆண்டுகளில் 04 பணிகள் தொடங்கப்பட்டு, அவற்றுக்காக ரூபா 24,922,968 செலவிடப்பட்டது. அவை 2023 திசெம்பர் 31 இற்குள் முடிக்கப்பட்டிருக்கபூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும் அந்த திட்டங்கள் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 க்குள் முடிக்கப்படவில்லை.	அமைச்சினால் ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்டதாக	செயலாற்றல் இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

3.6 ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்

3.6.1 தியபெதுமவில் உள்ள பழைய சந்தை இடத்தில் உள்ள கிராமப்புற சந்தை கட்டிடத்தின் எஞ்சியுள்ள பணிகளை முடித்தல்.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையில் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் தரம் தொடர்பாக இணங்கப்பட்டு இருந்த விதந்துரைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் நிறைவேற்றப்படாத வேலைகளை நிறைவேற்றியதாக உத்தியோகத்தர்களால் செய்யப்பட்டிருந்த உறுதிப்படுத்தலின் பேரில் ரூபா 821,018 சிக்கனமற்ற வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	நிறைவேற்றப்படாத வேலைகள் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ளதாக	நிறைவேற்றப்படாத வேலைப்பகுதிகளை நிறைவேற்றியதாக உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தில் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஆ)	15 வேலை உருப்படிகள் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியை மிகைத்து ரூபா 58,689 தொகையும் 28 ஆம் இலக்க உருப்படியில் உள்ளடக்கப்பட்ட வேலைக்காக 13 ஆம் இலக்க மேலதிக வேலை உருப்படி மூலம் ரூபா 151 360 தொகையும் 09 ஆம் வேலை	திருத்திய பட்டியலொன்றை தயாரித்து மேலதிக கொடுப்பனவினை அறவிடுவதற்கு	.கூடுதலான கொடுப்பனவினை பரிந்துரைத்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்கற்று

	விடயத்தின் விகிதத்தின் மேலே அதிக 9 மேலதிக வேலை விடயத்தை மிகைத்து ரூபா 34,930 என ரூபா 244,979 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	நடவடிக்கை எடுப்பதாக.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	இந்த செயற்திட்டத்தின் ஆரம்ப கிரய மதிப்பீடு பெறுமதி ரூபா 15,859,465 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 3,500,742 அதாவது ஆரம்ப கிரகத்தின் மதிப்பீட்டில் 22 சதவீதமான அளவில் செயற் திட்டத்திற்காக தேவையற்றஉருப்படிகளை உருப்படியாக உள்ளடக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட காரணத்தினால் போட்டி அடிப்படையில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த விலை நலன்களை பெற்றுக் கொள்ளப்பட முடியாதிருந்தது.	பதில் அளிக்கப்படவில்லை	மதிப்பீட்டை சரியான விலை சாதகங்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும்
(ஈ)	மதிப்பீட்டுப் பெறுமதியில் 21 சதவீதம் அளவிலான பெறுமதியான ரூபா 3,299,870 விலகளுக்காக அங்கீகாரம் பெற்றக் கொள்ளாமல் இருந்ததுடன் இறுதி பட்டியலுடன் As Building Drawing பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 10 உருப்படிகளுக்குரிய உத்தரவாத்தினை உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 469,021 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	உத்தராத சான்றிதழை தற்போது பெற்றுக் கொண்டுள்ளதாக.	இறுதி பட்டியலுடன் அனைத்து நிர்மாணங்களுக்குரியத ாக தயாரிக்கப்பட்ட As Building Drawing பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

3.7 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபையில் 04 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளும் 01 தொழில்நுட்ப உத்தியோத்த பதவியும் 01 வருமான பரிசோதகரும் 01 மின் தொழில்நுட்பவியலாளர் பதவியும் 03 வெளிக்கள தொழிலாளர் பதவிகளும் 01 சாரதி பதவியுமாக 11 உச்சியோகதத்ர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சுடலைச்சாலை உதவியாளர் மற்றும் சுகாதார தொழிலாளர் பதவிக்காக 4 உத்தியோகத்தர்களின் மிகையும் காணப்பட்டன.	உள்ளூராட்சி மன்ற திணைக்களத்துக்கு மும்மாத ரீதியில் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் மிகை கழிவுப்பொருள் முகாமைத்துவத்தில் காணப்படும் ஊழியத் தேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக.	வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை ஊழியர்களுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	பிரதேச சபையின் வெவ்வேறு பதவிகளுக்கு 09 உத்தியோகத்தர்கள் தமது நிரந்தர கடமைப் பதவிகளுக்கு உரியதல்லாத வருமான பரிசோதகர், சாரதி, பாதுகப்பு சேவை போன்ற ஏனைய பதவிகளில் 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலம் கடமை நிறைவேற்றி வந்தனர்.	சபையில் காணப்படும் சேவை தேவைபாட்டின் பேரில் அவர்கள் ஈடுபடுத்தியுள்ளதுடன் கடமை நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்வதற்கு இவ்வாறு வெவ்வேறு கடமைகளுக்காக இணைக்கப்பட்டுள்ளதாக.	நிரந்தர பதவிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டியதுதான் ஏனைய சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டால் முறைப்படி கடமை கையளிக்கப்பட வேண்டும்.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயலாற்றல் திட்டம்

(அ)	சபையினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 08 செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் அதில் 02 செயற்பாடுகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன.	சபையில் காணப்படுகின்ற நிதியத்தின் அளவின் பிரகாரம் இந்நிகழ்ச்சி திட்டங்கள் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது	செயலாற்றல் இலக்கை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஆ)	சபையினால் வருடாத செயல் நடவடிக்கை திட்டத்தில் மனிதவள அபிவிருத்திக்காக 15 செயலமர்வுகள் திட்டமிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 03 செயலமர்வுகள் மாத்திரம் செயற்படுத்தப் பட்டிருந்தன.	சபையில் காணப்படுகின்ற நிதியத்தின் அளவின் பிரகாரம் இந்நிகழ்ச்சி திட்டங்கள் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது	செயலாற்றல் இலக்கை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4.2 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2015 மார்ச் 18 ஆம் திகதி 4/2015 ஆம் இலக்க வடமத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை யின் 1.3 இன் பிரகாரம் சபையினால் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு மாத இறுதியில் பொதுச்சபைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக உள்ளக கணக்காய்வொன்று மேற் கொள்ளப்படாதிருந்ததுடன் கணக்காய்வாளருக்கு கணக்காய்வு வேலைகளுக்கு மேலதிகமாக 05 விடயங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.	உள்ளக கணக்காய்வினை சுயாதீன உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்குவதற்கு போதியளவு ஊழியர்கள் சபையிடம் இல்லையென்பதாக.	சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 சுற்றாடல் பிரச்சினைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபையால் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் லங்காபுர பிரதேச சபையின் கழிவுத் தொகுதிக்காக கொண்டு	கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கு தேவையான காணித் துண்டொன்று	. கிரயத்தை குறைக்கும்

செல்லப்படுவதுடன் அதற்காக பிரதேச சபை ஒரு பிரயாணத்திற்காக ரூபா 14,300 தொகையும் ஒரு மாதத்திற்கு ரூபா 114,000 ஆன செலவினமொன்றை மேற்கொள்வதுடன் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்களை 03 நாட்கள் அளவில் கம்பெக்டர் இயந்திரத்தில் களஞ்சியப்படுத்தி வைப்பதன் காரணமாக வண்டி உருக்குலைந்து வருகின்றது.	இல்லாமல் இல்லாததன் பேரில் சுட்டிக்காட்டுள்ளபட்டுள்ள குறைபாடு இருப்பதாகவும் காணித் துண்டொன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.	வகையில் கழிவுகளை வெளியேற்றுவதற்கு நடைமுறை ஒன்று பயன்படுத்தப்பட வேண்டும்

4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் ஒழுங்குபடுத்தலின் பிரகாரம் பிரதேச சபையால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிகழ்ச்சிகள் மற்றும் நியதிகள் இனங்காணப்பட்டு செயற்படுத்தல் இடம்பெற்றிருருக்கவில்லை.	நிகழ்ச்சிகளுக்காக 2025 ஆம் ஆண்டின் பாதீட்டில் நிதிஏற்பாடு மேற்கொண்ள்ளப்பட்டுள் ளதாக	சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் நிகழ்ச்சித்திடடங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.